# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No. 192/2021

சாட்சி : PW- 1
பெயர் : திரு.குமார் தேதி : 01.04.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:- ( பிரதிவாதிகள் தரப்பில்)

நான் குமார் சில்க்ஸ் என்ற நிறுவனத்தை 2010-2011ம் ஆண்டிலிருந்து நடத்தி வருகிறேன். நான் கடை துவங்கியது முதலே 1ம் பிரதிவாதியை எனது கடையில் வேலைக்கு வைத்திருந்தேன். 1ம் பிரதிவாதி எனது கடையில் வேலை செய்து வந்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு நான் ஊதியம் கொடுத்ததாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என்னிடம் வேலை செய்யவில்லை என்றும், மேற்படி குமார் சில்க்ஸ் என்ற நிறுவனத்தில் 1ம் பிரதிவாதி பங்குதாரர் என்றும், எனக்கு 60% பங்கும், 1ம் பிரதிவாதிக்கு 40% பங்கும் உள்ளது என்றால் சரியல்ல. பட்டுசேலை தயாரிப்பவர்களிடம் நான் ஒப்பந்த அடிப்படையில் மொத்தமாக பட்டு சேலைகளை வாங்குவேன். நான் பட்டு சேலைகள் வாங்கும் தயாரிப்பாளர் பல நெசவாளர்களிடமிருந்து பட்டுசேலைகளை வாங்கி வைத்திருப்பார் என்றும், அதிலிருந்துதான் நான் வாங்குவேனா என்றால் ஆமாம். மேற்படி தயாரிப்பாளரிடம் நான் வாங்கும் சேலைகளுக்கு உண்டான பணத்தை நான் மேற்படி தயாரிப்பவரிடம் கொடுததுவிடுவேன். மேற்படி சேலைகளுக்காக சில நேரங்களில் லட்சக்கணக்கிலும் பணம் கொடுப்பேனா என்றால் கொடுப்பேன். நான் 1ம்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.04.06 14:56:46 +0530

I Additional District Judge,
Salem

பிரதிவாதியின் மூலமாக கடைக்கு பட்டுசேலை மொத்தமாக வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியும், மேற்படி குமார் சில்க்ஸ் நிறுவனத்திற்கு பங்குதாரர் என்றும், அந்த வகையில் 1ம் பிரதிவாதியும் தயாரிப்பாளர்களிடம் நிறுவனத்திற்காக பட்டுசேலையை வாங்கி வருவார் என்றால் சரியல்ல. அவ்வாறு வாங்கும் சேலைகளுககு 1ம் பிரதிவாதியின் மூலமாக நான் பணத்தை தயாரிப்பாளர்களுக்கு கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே சுமூகமான உறவு இல்லை. சுமார் 2021ம் ஆண்டில் என் மீது ஒரு காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்தார். அதற்கு முன்பே 2018-2019ம் ஆண்டிலிருந்து எனக்கும், அவருக்கும் இடையே ஒரு சுமூகமான உறவு இல்லை. மேற்படி நிறுவனத்திற்கு 1ம் பிரதிவாதி பங்குதாரர் என்றும், 1ம் பிரதிவாதிக்கு உண்டான லாபத்தை நான் அவருக்கு கொடுக்க முடியாது என்றும் தெரிவித்த காரணத்தினால்தான் எங்களுக்குள்ளாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2017ம் ஆண்டில் வழக்கு சொத்தை நான் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். 2019ம் ஆண்டில் பிரதிவாதியின் பெயருக்கு சொத்தை கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 2017ம் ஆண்டிலிருந்து 2019ம் ஆண்டு வைரை வழக்கு சொத்திற்கு உண்டான வருவாய் ஆவணங்கள் என் பெயரில் மாற்றப்படவில்லை என்றால் சரியல்ல.1ம் பிரதிவாதி பெயருக்கு ரூ.36,10,500/- வழக்கு சொத்தை கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரயத்தின்போது ரூ.10,500/-ஐ ரொக்க பணமாகவும், ரூ.36 லட்சத்தை வங்கி பரிவர்த்தனை மூலமாகவும் நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்காக வாங்கிய பட்டு சேலைகளுக்கு உண்டான பணத்தை நான் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்திருந்தேன் என்றும், அந்த பணததை கொண்டுதான்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.04.06 14:56:52 +0530

I Additional District Judge,
Salem

1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை கிரயம் பெற்றார் என்றார் சரியல்ல. அவர் தொழில் செய்வதற்காக பணம் கேட்டார். நான் கடனாக பணம் கொடுத்தேன். அந்த பணத்தை தான் 1ம் பிரதிவாதி எனக்கு திருப்பி செலுத்தினார். வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் அதனை நன்கு தெரிந்துகொண்டுதான் நான் கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரய தேதி முதல் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தினை அடைந்து வருவாய் தன் பெயருக்கு மாற்றிக்கொண்டு மேற்படி சொத்தை வாடகைக்கு விட்டு அதற்குண்டான வாடகையையும், 1ம் பிரதிவாதி தான் வசூல் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதி கிரயம் செய்து கொண்டார் என்ற விவரம் எனக்கு 2021ம் ஆண்டில் தான் தெரியவந்தது. எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே நிறுவனத்திலுள்ள பங்கு சம்மந்தமாக 1ம் பிரதிவாதி சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரிதான். ஆனால் 1ம் பிரதிவாதி மேற்படி விசாரணைக்கு வரவில்லை. நான் தான் சென்றேன். 1ம் பிரதிவாதியிடம் என்ன ஆவணம் உள்ளதோ அதனை எடுத்து வரும்படி போலிசார் சொன்னார்கள். ஆனால் 1ம் பிரதிவாதி ஆவணம் எதையும் எடுத்து கொண்டு வரவில்லை. 1ம் பிரதிவாதிக்கு நான் பணம் ரூ.75 லட்சம் தரவேண்டியுள்ளது என்று ஒரு காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாக்கல் செய்துள்ளார். நான் காசோலை எதுவும் 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை. மேற்படி காசோலை 1ம் பிரதிவாதியின் பங்கு தொகைக்காக என்னால் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் விசாரணைக்கு 1ம் பிரதிவாதி ஆஜராகவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றும், 1ம் பிரதிவாதி அனைத்து ஆவணங்களையும் எடுத்துக்கொண்டு போலிஸ் விசாரணைக்கு

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.04.06 14:56:57 +0530

I Additional District Judge,
Salem

ஆஜரானார் என்றும, மேற்படி 1ம் பிரதிவாதியிடம் இருந்த அனைத்து ஆவணங்களையும் அன்றைய தினமே நானும் பார்த்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதன்பிறகு நான் காலதாமத்துடன் 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள கிரய ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது பெயரில் ஏற்பட்டிருந்த கிரய பத்திரத்தின் முதல் பக்கத்தை 1ம் பிரதிவாதி எடுத்து வர சொன்னார் என்று நான் தவறுதலாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஒரு ஆவணத்தின் முதல் பக்கத்தை மட்டும் வைத்துகொண்டு அடுத்த ஆவணம் எழுத இயலாது என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதி கடன்வாங்குவதற்கு என்று கேட்டதால் என்னிடமிருந்த அனைத்து அசல் ஆவணங்களையும் எடுத்து சென்றேன். வழக்கு சொத்தில் இருந்த வாடகைதாரர்களிடம் இவ்வழக்கு தாக்கல் செய்யும் வரையில் நான் தான் வாடகை வசூலித்து கொண்டிருந்தேன். வழக்கிற்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதி வசூல் செய்து வருகிறார். நான் ராமநாதனிடம் சொத்தை கிரயம் பெறுவதற்கு முன்பிருந்தே அதே வாடகைதாரர்கள் இருந்து வந்தார்கள். தற்போதும் அவர்கள்தான் இருக்கிறார்கள். மேற்படி வாடகைதாரர்களிடம் நான் வாடகை வசூல் செய்தேன் என்பதற்கும், அவர்கள் எனக்கு வாடகை கொடுத்துவந்தார்கள் என்பதற்கும், ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாடகைதாரர்களின் பெயர் எனக்கு நினைவில் இல்லை, வழக்கு சொத்தை நான் தான் பிரதிவாதிகள் பெயருக்கு கிரயம் செய்து கொடுத்தேன் என்றும், பிரதிவாதிகள் என்னை ஏமாற்றி கிரயம் பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு நிறுவன பங்குதொகையை / லாப தொகையை கொடுப்பதிலிருந்து ஏமாற்றுவதற்காக வழக்கு சொத்தை பிரதிவாதியிடம் நான் கிரயம் கொடுக்கவில்லை என்று தவறாக கட்சி

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.04.06 14:57:03 +0530

I Additional District Judge,
Salem

செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை கிரயம் பெற்றது முதல் பிரதிவாதிகள்தான் உரிமையாளர்களாக சுவாதீனத்தில் இருந்து வாடகைக்கு விட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது வழக்கு தவறான சங்கதிகளுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனது வழக்கு நிலைக்கக்கூடியதல்ல என்றும், எனவே எனது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.04.06 14:57:09 +0530

I Additional District Judge,
Salem